உ

கடவுள் துணை.

திருப்புல்வயல்

குருபாததாசர் அருளிச்செய்த

குமரேச சதகம்.

இஃது

மைலம்

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

சென்னை - இட்டா,

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

சென்னை, ஆசாரப்பன் தெரு நெ. 84.

உ

சிவமயம்,

குமரேசசதகம்

—— * ——

காப்பு.

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமேவிய சதகஞ் செப்பவே—கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

அவையடக்கம்.

மாரிக்குநிகரென்று பனிசொரிதல்போலவு மனைக்குநிகரென்றுசிறுபெண், மணல்வீடுகட்டுவதுபோலவுஞ் சூரியன்முன்மருவுமின்மினிபோலவும், பாருக்குணல்லோர்முனேபித்தர்பலமொழி பகர்ந்திடுஞ் செயல்போலவும், பச்சைமயிலாடுதற் கிணையென்றுவான்கோழி பாரிலாடுதல்போலவும், பூரிக்குமினியகா வேரிக்குநிகரென்று போதுவாய்க்கால்போலவும, புகல்சிப்பிமுத்துக்கு நிசராப்பளிங்கைப் பொருந்த வைத்ததுபோலவும், வாரிக்குமுன்வாவி பெருகல்போலவுமின்சொல் வாணர்முனுக்துபுல்லை. வாலகுமரேசர்மேற் சதகப்புகன்றனன் மனம்பொருத்தருள்புரிவையே.

குமரேசர்மகிமை.

பூமிக்கொராறுதலை யாய்வந்துசரவணப் பொய்கைதனில் விளையாடியும், புனிதர்க்குமந்த்ரவுப தேசமொழிசொல்லியும் போசனைச்சிறையில்வைத்தும், தேமிக்கவரிகரப் பிரமாதிகட்குஞ் செயிக்கமுடியாவசுரனைத், தேகங்கிழித்துவடி வேலினாலிருகூறு செய்தமரர்சிறைதவிர்த்தும், நேமிக்குளன்பரிட ருற்றசமயந்தனி னினைக்குமுன்வந்துதவியும், நிதமுமெய்த்துணையாய் விளங்கலாலுலகினை நிகரானதெய்வமுண்டோ, மாமிக்கதேன்பருகு பூங்கடம்மணியுமணிமார்பனே வள்ளிகணவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

அந்தணரியல்பு.

குறைபாதகாயத்ரி யாதிசெபமகிமையுங் கூறுசுருதிப்பெருமையுங், கோதிலாவாகம புராணத்தின்வளமையுங் குலவுயர்சாதிபலவும், முறையாகநடத்தலாற் சகலதீவினைகளையு முளரிபோலேதகிப்பார், முதன்மைபெருசிலைசெம்பு பிருதிவிகளிற்றெய்வ மூர்த்தமுண்டாக்குவிப்பார், நிறையாகநீதிநெறி வழுவார்களாகையா னீண்மழைபொழிந்திடுவதும், நிலமதுசெழிப்பது மரசர்செங்கோல்புரியு நிலையுமாதவர்செய்தவமும், மறையோர்களாலே விளங்குமிவ்வுலகத்தின் மானிடத்தெய்வமிவர்காண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

உ

அரசரியல்பு.

குடிபடையிலபிமானமந்திராலோசனைகுறிப்பறிதல்சத்யவசனங் கொடைநித்தமவரவர்க்கேற்றமரியாதைபோற்ற கோட்டாகசதுருபாய

விரைந்நடக்கத் தகுவன விவையெனல்.

அக்கினியைவாய்மூர்க்க துர்ச்சனரைவஞ்சமனையாளை வளர்பயிர்கொள்களையை, அஞ்சாவிரோதிகளையனியாயமுடையோரையகீர்த்தியைப்பெண்களாரப்பைக், கைக்கினியதொழிலாளியைக்கொண்ட வடிமையைக்கடிதானகோபந்தனை, மெய்க்கினிதலாப்பிணியை யனைவயுதாசீனத்தைவினைமூண்டிடுஞ்சண்டையை. விஷாமறுகோர்த்தையன்றடக்குவதலான்மிஞ்சவிடலாகாதுகாண், மைக்கினிகண்ணிகுறவள்ளிதெய்வானையைமணஞ்செய்தபேரழகனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௧௨

இவர்க்கிது துரும்பெனல்.

தாராளமாகக்கொடுக்குந்தியாகிகடமக்குநற்பொருள் துரும்பு, தன்னுயிரையெண்ணாத சூரனுக்கெதிராளி தனமெலாமொரு துரும்பு, பேரானபெரியருக்கற்பாதுகையினிற் பிரயோசனந்துரும்பு, தீனமோக்ஷசிந்தனையுள்ளவர்க்கெலாம் பெண்போகமொருதுரும்பு, தீராதசகலமும்வெறுத்துறவிக்குவிறல்சேர்வேந்தனொருதுரும்பு, செயயகலைநாமகள்கடாக்ஷமுள்ளோர்க்கெலாஞ்செந்தமிழ்க்கவிதுரும்பாம், வாராருமணிகொண்முலைவள்ளிதெய்வானையைமணம்புணரும் வடிவேலவா மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

இதனைவிளக்குவ திதுவெனல்,

பகல்விளக்குவதிரவிநிசிவிளக்குவதுமதியார் விளக்குவதுமேகம், பதிவிளக்குவதுபெண்குடிவிளக்குவதாகபரிவிளக்குவதுவேகம், இகலவிளக்குவதுவலிநிறைவிளக்குவதுநலமிசைவிளக்குவதுசுதியூ, ரிடம்விளக்குவதுகுடியுடல்விளக்குவதுதுண்டியினியசொல்விளக்குவதருள், புகல்விளக்குவதுகொடை அவம்விளக்குவதரிதுபூவிளக்குவதுவாசம், பொருளவிளக்குவதுதிருமுகம்விளக்குவதுநகைபுந்தியைவிளக்குவது நூல், மகம்விளக்குவதுமறைசொல்விளக்குவதுநிசம்வாவியைவிளக்குவதுநீர், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

பிறம்பிட னன்மையால் நன்மைபெறுமை

சிங்காரவனமதி லுதிப்பினுங்காகமது தீஞ்சொல்புகல்குயிலாகுமோ, திரையெறியும் வாவியிற் பூத்தாலுமேகொட்டி செங்கஞ்சமலராகுமோ, உக்கானகத்திற் பிறந்தாலுமுயலானதானையின்கன்றாகுமோ, ஆண்மையாகியநல்ல குடியிற்பிறந்தாலு மசடர்பெரியோராவரோ, சங்காடுபாற்கடல் பிறந்தாலுநத்தைதான சாலக்கிராமமாமோ, தடமேவுகடனீரிலேயுப்பிவிளையினுஞ் சாரசக்கரையாகுமோ, மாங்காத செந்தமிழ்க்குறுமுனிக்குபதேசம வைத்தமெஞ்ஞானகுருவே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

பலர்க்கும் பயன்படுவன.

கொண்டல்பொழிமாரியுமுதாரசர் குணமுடையகோவுமூருணியினீரும், கூட்டமிடுமம்பலத் தறுதருவினீழலுங் குடியாளர்விவசாய

மும், கண்டவர்களெல்லாம் வரும்பெருஞ்சந்தியிற் கனிபலபழுத்தமரமும், கருணையுடனேவைத் திருந்தண்ணீர்ப்பந்தலுங்காவேரி போனூற்றமும், விண்டலத்துறைசந்தி ராதித்யகிரணமும் விசுமாருதசீதமும், விவேகியெனுநல்லோ ரிடத்திலுறுசெல்வமும் வெகுஜனர்க்குபகாரமாம், வண்டமிர்கடப்பமலர்மாலையணிசெங்களபமார்பனே வடிவேலவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

தாபழிபினுங் குணமழியாமை,

தங்கமானதுதழலி னின்றுருகிமருகினுந் தன்னொளி மழுங்கிடாது சந்தனக்குறடுதான் மெலிந்தேய்ந்தாலுமோ தன்மணங்குன்றிடாது, பொங்குமிகுசங்குசெந்தழலில்வெந்தாலுமோ பொலிவெண்மைகுறைவுறாது, போதவேகாய்ந்துநற் பால்குறுகினாலும் பொருந்துசுவைபோய்விடாது, துங்கமணிசாணையிற் றேய்ந்துவிட்டாலுந் துலங்கு குணமொளியாதுபின், தொன்மைதருபெரியோர் மடிந்தாலுமவர்களதுதூயநிறைதவறுருகுமோ, மங்களகல்யாணிகுறமங்கைசுரகுஞ்சரியை மருவுதிண்புயவாசனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௰௭

(நரகில்வீழ்வோர்)

மன்னரைச்சமரில்விட் டோடினவர்குருமொழி மறந்தவர்கொலைபாதகர், மாதாபிதாவைநிந் தித்தவர்கள்பரதார மருவித்திருந்த பேர்கள், அன்னங்கொடுத்தபோருக்கழிவையெண்ணினோ ராசடக்கிபவமைச்சர், ஆலயமிகழ்ந்தவர்கள் விசுவாசகாதக ரருந்தவர் முகஸ்துதிவழக்குரைப்போர், முற்றுசிவ பத்தர கடுங்கச் சினந்தவர்கண் முழுதும்பொய் யுரைசொல்லுவோர், மன்னொருவர்வைத்தபொரு ளபகரித்தோரிவர்காண் மாநகரகில்வீழ்வரன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, ௰௮

சரீரசுகம்.

மாதத்தி ண்டுவிசை மாதரைப்புல்குவது மறுவருவிரோசனந்தான், வருஷத்திரண்டுவிசை தைலந்தலைக்கிடுதல்வாராத்திரண்டுவிசையாம், மூதறிவி னுடுதனது வயதினுக்கிளையதொரு மொய்குழலுடன் சையோகம், முற்றுதயிர்காச்சுபால் நீர்மோருருக்குநெய் முதிராவழுக்கையிளநீர், சாதத்திலெவளவா னாலும்புசித்தபின் தாகந்தனக்குவாங்கல், தயையாகவுண்டபின் உலாவலிவைமேலவர் சரீரசுகமாமென்பர்காண், மாதவகுமாரிசாரங்கத்துதித்தகுறவள்ளிக் குகந்தசரசா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

யார்க்குமனுபோகம் விடாமை.

தேசுபெறுமேருபிர தட்சணஞ்செய்தும்மதி தேகவடுநீங்கவில்லை, திருமாலுறங்கிடுஞ் சேடனுக்குவணன் செருப்பகை யொழிந்ததில்லை, ஈசன்கழுத்திலுறு பாம்பினுக்கிரைவே ரிலாமலேவாயுவாகும், இனிய கண்ணாகிவரு பருதியானவனுக் கிராகுவேகனவிரோதி, ஆசிலாப்பெரியோரிடத்தினிலடுக்கினு மமைத்தபடியன்றிவருமோ; அவரவர்களனுபோக மனுபவித்திடம்வேண்டு மல்லால்வெறுப்ப தெவரை, வாசு

வனுமும்பரனே வரும்விஜயஜயவென் றுவந்தொழுதேத்துசரணா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

இதுவின்றி இதுசிறவாதெனல்.

குருவிலாவித்தைகூறறிவிலாவாணிபங் குணமிலாமனைவியாசை, குடிநலமிலாநாடுநீதியில்லாவரசுகுஞ்சரமில்லாதவெம்போர், திருவிலாமெய்த்திறமைம் பொறையிலாமாதவந் தியானமில்லாதநிஷ்டை, தீபமில்லாமனை சோதரமில்லாதவுடல்சேகரமிலாசென்னி, உருவிலாமெய்வளமை பசியிலாவுண்டிபுக ழுண்மையில்லாதவசனம், யோசனையில்லாமந்திரி தைரியமில்லாவீர முதவியில்லாதநட்பு, மருவிலாவண்ணமலர் பெரியோரிலாதசபைவையத்திருந்தென்பயன், மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௨௧

பகைக்கப்படாதவரிவரெனல்.

அரசர்பகையுந்தவம் புரிதபோதனர்பகையுமரியகருணீகர் பகையும், அடுத்துக்கெடுப்போர் கொடும்பகையுமுட்பகையு மருளிலாக்கொலைஞர்பகையும், வெகுஜனப்பகையுமந் திரவாதியின்பகையும்விஷமருத்துவர்கள்பகையும், உரமருவுகவிவாணர் பகையுமாசான்பகையு முறவின்முறையார்கள்பகையும், உற்றதிரவியமுளார் பகையுமந்திரி பகையு மொருசிறிதுமாகாதுகாண், வரந்தியின்மதலையென வினிபசரவணமிசையில் வருகருணைசிறுகுழவியே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௨௨

பேயெனப்படுவோரிவரெனல்.

கடனுதவுவோர்வந்து கேட்கும்வேளையில்முகம் கடுகடுக்கின்றபேயும், கனமருவுபெரியதனம் வந்தவுடனிறுமாந்து கண்விழிக்காதபேயும் அடைவுடன்சத்துருவின் சேர்க்கைவிசுவாசித் தகப்படுகின்றபேயும், ஆசைமனையாளுக்குநேசனாயுண்மைமொழி யானதையுரைத்தபேயும், இடரில்லாநல்லோர்கள பெரியோர்களைச்சற்று மெண்ணாதுரைத்தபேயும், இனியபரிதானத்திலாசைகொண் டவாக் கிடுக்கண்செய்திட்டபேயும், மடமனையிருக்கப்பரத்தையைப்புணர்பேயும்வசைபெற்றபேய்களன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

அவ்வினத்திலுயர்ந்தவை

தாருவிற்சந்தான நதியினிற்கங்கைவிர தத்தினிற்சோமவாரந் தகைபெறுநிலத்தினிற் காஸ்மீரகண்டந் தலத்தினிற்சிதம்பரதலம், சிருலவுரிஷிகளில் வசிஷ்டர்பசுவிற்காம தேனுமுனிவரில்நாரதன், செல்வநவமணிகளிற் றிகழ்பதுமராகமணிதேமலரிலம்போருகம், பெருலவுமற்பினி லநக்கதிக்கித்திடு பெலத்தின்மாருதம் யானையிற், பேசிலைராவதந் தமிழினிலகத்தியர் பிரணவம்மந்திரத்தில்; வாரிதியிலே திருப்பாற்கடல் குவட்டினின் மகமேரு வாகுமன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகுமரேசனே. ௨௪

அவரவர்க்குப் பெலமாவன.

அந்தணர்க்குயர்வேத மேபெலங்கொற்றவர்க்கரிய சௌரியமேபெலம், ஆனவணிகர்க்கு நிதியேபெலஞ் சூத்திரர்க்காயினேருழவே பெ

லம், மந்திரிக்குச்சதுருபாயமேபெலநீதி மானுக்குநடுவேபெலம், மாதவர்க்குதபசு பெலம்படிவியர்க்குநிறைமானமிகுகற்பேபெலம், தந்திரிகுக்க[illegible] சேவகர்தமக்கெலாஞ் சாமிகாரியமேபெலம், சான்றவர்க்குப்பொறுமையேபெலம்புலவோர்தமக்கு நிறைகல்விபெலமாம், வந்தனைசெயுப்பூசைசெய்பவர்க்கன்புபெலம் வடிவேலா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௨௬

இருந்தும்பயன்படாதவை.

தருணத்திலுதவிசெய்யாத நட்டாளர்பின் றந்தெனதராமலென்ன, தாதாரமறிந்துமுறைசெய்யாதமன்னரைச் சார்ந்தென்னநீங்கிலென்ன, பெருமையுடனுண்மையில்லாதவொருபிள்ளையைப் பெற்றெனபெறாமலென்ன, பிரியமாயுள்ளன்பிலாதவர்களைசப்பிடித்தெனவிடுக்கிலென்ன, தெருளாகமானமில்லாதவொருசீவனஞ் செய்தெனசெயாமலென்ன, தேடியேவருபவர்க்கீயாதசெல்வஞ் சிறந்தெனமுறிந்துமென்ன, மருவியமைநன்னிலில்லாதகன்னிகையினைபுவந்தெனாமலென்ன, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

உபகாரமில்லாதவை.

கடனீர்மிகுந்தென்னவாதிகான்பெருத்தென்ன காட்டிலவுமலரிலென்ன, கருவேல்பழுத்தென்னநாய்பால்சுரந்தென்ன கானின்மழைபெய்தமென்ன, அடர்கழுதைலத்திலெல்லாய்க்குவிந்தென்னவரியகுணமில்லாதபெண், அழகாயிருந்தென்னவாஸ்தானகோழைபலவரியநூலோர்ந்துமென்ன, இடமினியபூதம்வெகுபொன்காத்திருந்தென்ன திறன்மிகுங்கரடி மயிர்தான், செறிவாகநீண்டென்ன வஸ்த்ரபூஷணமெல்லாஞ்சித்திரத்துற்றுமென்ன, மடமிருந்தவருக்கு முபகாரமில்லாதவம்பாவாழ்வுக்குநிகராம்-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௨௭

பதரெனப்படுவோர்.

தன்பெருமைசொல்லியேதன்னைப்புகழ்ந்தபதர் சமர்கண்டொளிக்கும்பதர், தக்கபெரியோர்புத்திகேளாதபதர் தோழர்தம்மொடுசலிக்கும்பதர், பின்புகாணுவிடந்தன்னிலேபுரணிபல பேசிக்களிக்கும்பதர், பெற்றதாய்தந்தைதுயர் படவாழ்ந்திருந்தபதர் பெண்புத்திகேட்கும்பதர், பொன்பணமிருக்கவே போயிரக்கின்றபதர் பொய்சாட்சிசொல்லும்பதர், புவியோர்நடத்தையை இகழ்ந்தபதர், தன்மனைவிபுணர்தல்வெளியாகும்பதர், மன்புணருமேசையுடன்விபசரிக்கின்றபதர்மனிதரிற்பதரெனபர்காண் மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௨௮

காணாவிடிற்றுயரப்படுமவை.

இரவிகாணாவனச மாரிகாணாதபயிரிந்துகாணாமகுமுதல், ஏர்தல் காணாநாடுகரைகள்காணாவோடமின்சொல்காணாவிருந்து, சுரபிகாணாத கன்றன்னைக்காணாதமலை சோலைகாணாதவண்டு, தோழர்காணா நேயர் கலைகள் காணாதமான் சோடுகாணாகம்படு, குரவர்கணாசனைதியாகிகா ணாவுறிஞர்கொழுநர்காணாதபெண்கள், கொண்டல்காணாமயில் சிறு வாகாணாவாழ்வுகோடைகாணாதகுயில்கள், வரவுகணாசெல வினை யலாமபுவிமீதில்வாழ்வுகாணாவிளமையாம், மயிலேறிவிளையாடு குக னேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௨௬

வியாதிமூலங்கள்.

கல்லினான்மயிரினான்மீதூண்விரும்பலாங் கருதியவிசாரத்தினால் கடுவழிநடக்கையாணமலசலமடக்கையாற் கனிபழங்கறியுணலால், நெல்லினாலுமியினா லுண்டபின்மூழ்கலாநித்திரைகளில்லாமையால், நீ ர்ப்பகையினாற்பனிக்காற்றினுடனேதலா னீடுசருகிலையூறலால, மெல் லிநல்லார்கலவியதிகமுள்விருப்பலால் விழ்மலஞ்சிக்குமகையினால், மிகு சுமையெடுத்தலா லிளவெயிற்காய்த்தலான் பெய்வாடவேலைசெயலால் வல்லிரவிலேதயிர்கள்சருகாதியுண்ணலால் வன்பிணிக்கிடமென்பர்கா ண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

செத்துஞ்சாகாதவர்

அனைவர்க்குமுபகாரமாம்வாவிகூபமுண்டாக்கினோர் நீதிமன்னர், அழியாததேவாலயங்கட்டிவைத்துளோ ரகங்கள்செய்தபெரியோர், த னையொப்பிலாப் புதல்வனைப் பெற்றபேர் பொருதுசமர்வென்ற சுத்த வீரர், தரணிதனினிலைநிற்கவென்றுமாறாததருமங்கள் செய்தபேர் கள், கனவித்தைகொண்டவர்களோயாதகொடையாளர்காவியஞ்செய் தகவினர், கற்பினின்மிகுத்ததொருபத்தினிமடந்தையைக் கடிமணஞ் செய்தோர்களும், மனிதர்கள் சரீரங்கள்போகினுஞ்சாகாத மனிதரிவ ராகுமன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு குமரே சனே. ௩௧

சாகாதிருந்துஞ்செத்தவர்.

மாறாதவறுமையோர் தீராதபிணியாளர் வருவேட்டகத்தி லுண் டோர், மனைவியைவழங்கியேஜீவனஞ்செய்குவோர் மன்னுமொருராஜ சபையில், தூறாகநிந்தைசெய்துய்குவோர்சிவிகைகள் சுமந்தேபிழைக் கின்றபேர், தொலையாதவிசாரத் தழுந்துவோர்வார்த்தையிற் சோர்வு டடலுற்றபெரியோர், வீறாகமனையாடனக் கஞ்சிவந்திடு விருந்தினை யொழித்துவிடுவோர், வீம்புடன்சொல்லாதவிவகாரமதுகொண்டுமிக்க சபையேறுமசடர்; மாறாகவிவரெலாமுயிருடன்செத்தசவமாகி யொளி மாலவர்கண்டாய், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகு மரேசனே. ௩௨

சிறிதும்பயன்படாதவை.

பதராகிலுங்கன விழுதிவிளைக்கும் பழமைபெறுசுவராகிலும், ப
லருக்கு மறைவாகுமாமுரிஞ்சிமேலம் பன்றிகட்குபயோகமாம், கதமி
குகடாவெனி லுழுதுபுவிகாக்குமவன் கழுதையும் பொதிசுமக்கும்,
கல்லெனிற்றேவர்களு மாலயமுமாம் பெருங்கான்புற்றுமரவமனையாம்
இதமிலாச்சவமாகி லுஞ்சிலர்க்குதவிசெயு மிழிவுறுகுரங்காயினும்,இ
ரக்கப்பிடித்தவர்க் குதவிசெயும்வாருகோ லேற்றமாளிகை விளக்கும்,
மதமாறுமிதும்பரம லோபராலுபகார மற்றொருவருக்குமுண்டோ, ம
யிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௩௩

உலுத்தரியல்பு.

திரவியங்காக்குமொரு பூதங்கள் போற்பணந்தேடிப்புதைத்து
வைப்பார், சிலைநலமாகவுங் கட்டார்க ணல்லமுது செய்துணா றறமு
ஞ்செயார், புரவலர்தண்டந் தனக்கும் வலுவாகப் புகுந்திருவருக்குமீ
வார், புல்லரைக்கண்டவுடனோடிப்பதுங்குவார் புராணிகர்க்கொன்று
முதவார், விரகறிந்தேபிள்ளைசோறுகறிநினுமளவில்வெகு பணஞ்செ
ல்வர்களால், விளையாடுகிழவனும் பிள்ளையேபிள்ளையென மிகுசெட்டி
சொன்னகதைபோல், வரவுபார்க்கின்றதேயல்லாதுலோபியர்கண்மற்
றொருவருக்கீவரோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமே
வுகுமரேசனே. ௩௪

திருவாழிடங்கள்.

கடவாரணத்திலுங்கங்காசலத்திலுங்கமலாசனந்தன்னிலும், கா
குத்தன்மார்பிலுங்கொற்றவரிடத்திலுநகாலியின்கூட்டத்திலும், நட
மாடுபரியிலும்பொய்வார்த்தைசொல்லாத நல்லோரிடந்தன்னிலும்,
நல்லசுபலட்சண மிகுந்தமனைதன்னிலு மரணசுத்தவீராபாலும், அ
டர்கேதனத்திலுஞ் சுயம்வரந்தன்னிலு மருந்துளசிவில்வத்திலும், அ
லர்தருகடம்பமலர் தனிலுமிகுதகதிலு மதிககுணமானரூப, மடவாரி
டத்திலுங் குடிகொண்டுதிருமாது மாறுதிருப்பளன்றோ, மயிலேறிவி
ளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௩௫

மூதேவி வாழிடங்கள்.

சோரமங்கையர்கணிக முறையார்கள்வாயினிற் சூதகப்பெண்க
ணிழலில், சூளையிற்சூழ்கலுழு புகையிற்களேபரஞ் சுடுபுகையினீசர்நி
ழலில், காரிரவிலரசநிழலிற்கடாநிழலிலொடு கருதியவிளக்கு நிழலில்,
காமுகரினிஷ்டையிலலாதவர்முகத்திற் கடுஞ்சினத்தோர்சபையினில்,
ஈரமில்லாக்கள் நிலத்தினிவிராதகரயிரிவிழிபுமது பானர்பாலில், இலை

வேல்விளாவிழுவி னிதமருக்கடையனையி லணாயக்காத்தாள், வாரிய முறத்துள் பெருக்குதூண்முமேதவி மாறுதிருப்பளென்பர், மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே, ௩௬

திருந்தாமை

கட்டியெருவிட்டுச்செழுந்தேனைவார்க்கினுங்காஞ்சிரங்கைப்புவிடுமோ, கழுதையைக்கட்டிவைத்தோமம்வளர்க்கினுங்கதிபெறுங்குதிரையாமோ, குட்டியரவுக்கமுதளித்தேவளர்க்கினுங் கொடுவிஷமலாதுதருமோ, குக்கனெடுவாலுக்குமட்டையைக்கட்டினுங் கோணாமலேநிமிருமோ, ஒட்டியேகுறுணிமையிட்டாலுமயமிலா யோனிகருநிறம்விடுமோ, உலவுகனகற்பூரவாடைபலகூட்டினு முள்ளியின்குணமாறுமோ, மட்டிக்காயிரம் புத்திசொன்னாலுமதின் மார்க்கமரியாதை வருமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே,

குறிப்பறிதல்.

மனதிற்கடும்பகைமுகத்தினாலறியலா மாநிலப்பூதகமெல்லாம், மழையினாலறியலாம் நல்லார்பொல்லாதமை மக்களாலறியலாகும், கனமருவுசூரரைச் சமரினாலறியலாங் கற்றவொருவித்துவானைக், கல்விப்ரசங்கத்தினாலறியலாங்குணங்களை நடையினாலறியலாங், தனதகமடுத்தது பளிங்கினாலறியலாஞ் சாதிசொல்லாலறியலாம், தருநீதிகேள்வியாலறியலாம்பிணிகளைத் தாதுக்களாலறியலாம, வனசவிகசித வதனபரிபூரணானந்த ஞானவடிவானவேலா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௩௮

குணமாறாமை.

குணமிலாத்துஷ்டமிருகங்களையுநயகுணங் கொண்டிணக்கிவிடலாம, கொடியபலவிஷநோய்களையாவுமௌஷதமது கொடுத்துத்திருப்பிவிடலாம, உணர்விலாப்பிரமராக்ஷசமுதறபேய்களையுந்துகூத்தாடிவிடலாம, உபாயத்தினாற்பெரும பறவைகளுக்குநற்புத்தியுண்டாக்கலாமுயிர்பெறப், பிணமதையெழுப்பலா மக்கினிசுடாமற் பெரும்புனலெனச்செய்யலாம், பிணியையுமகற்றலாங் காலதாதுவரையும் பின்புவருமென்றுசொல்லலாம், மணலையுங்கயிறுத்திரிக்கலாங் கயவர்குணமட்டுந்திருப்பவசமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகுமரேசனே. ௩௯

இத்தீக்குணத்தோரிவ்விலக்குபோல்வரெனல்.

தான்பிடித்ததுபிடிப்பென்றுமேலவர்புத்தி தள்ளிச்செய்வோர்குரங்கு, சபையிற்குறிப்பறியமாட்டாமனிதரவர்தாம்பயனிலாதமரமாம

விம்பிளுமெளியவரை யெதிர்பண்ணிநிற்குமொரு வெறியாகுரைஞ
மரியாவர், மிகநாடிவருவோர் முகம்பார்த்திடாலோயர் மேன்மையி
ல்லாதசமூகை, சோம்பலொடுபெரியோர் சபைக்குட்படுத்திடுந் தூங்
கலேசண்டிக்கடா, குதூடனடுத்தோர்க் கிடுக்கணேசெய்திடுந் துஷ்ட
னைகொட்டுதேளாம், மாமபழுந்தனைவேண்டி யந்நாளிலீசனை வலமாக
வந்தமுநகாமயிலேறிவிளையாடு குகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரே
சனே ௪௰

அற்பர்வாழ்வால் குணம் வேறுபடுதல்.

அற்பர்க்குவாழ்வுசற்றதிகமானால் விழிக்கியாவருநவந்தோன்றிடாத
ண்டிகின்றநல்ல வார்த்தைகளுரைக்காலுமவர்செவிக்கேறிடாது, முற்
பக்ஷமானபேர் வருகினும்வாருமெனமொழிபவுவாய்வராது, மோதி
யேவாதப் பிடிப்புவந்ததுபோல முன்காலைபகலவைப்பார, விற்பனமி
குந்தபெரியோர்செயதிசொன்னாலும் வெடுவெடுத்தேகிநிற்பார், விரு
தாமகத்துவப் பேபதுசவுக்கடிந்துவிழும்போதுதீருமென்பார், மற்புயத்
தனினீபமாலையணிலாலனைமார்பனேவடிவேலவா, மயிலேறிவிளையா
டு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௪௧

இத்தீங்குளோ ரிக்கோள்போல்வரெனல்.

அன்னைதந்தையர்புத்தி கேளாதபிள்ளையோ வஷ்டமச்சனியாகுவா
ன், அஞ்சாமலெதிர்பேசிநிற்குமனையாள்வாக்கிலங்காரகச்சன்மமாம், த
ன்னைமிஞ்சிச்சொன்ன வார்த்தைகேளாவடிமை சந்திராஷ்டகமென்ன
லாம், தன்பங்குதாதாவென்று தம்பியோ சார்ந்தசன்மச்சூரியன் நன்
னயமிலாதவஞ்சனைசெய்தகமையன் மூன்றுமிடத்தில்வியாழம், நா
டோறும்விரோதமிடு கொண்டோனைகொடுத்துளோன்ராகுகேதுக்களெ
ல்லாம், மன்னயனையன்றுசிறை தனிலிட்டுமேபெற்ற மந்திரமுரைத்தகு
ருவே மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

நல்லினஞ்சேர் பயன்.

சந்தனவிருக்ஷத்தை யண்டிநிற்கின்றபல தருவுமவ்வாசனைதரும்
தங்கமகமேருவை யடுத்திடுங்காக்கையுஞ் சாயல்பொன்மயமேதரும், ப
ந்தமிகு பாலுடன் விளாவியதணீரெலாம்பால்போனிறங்கொடுக்கும்,
அந்தமிகுமரகதக் கல்லைத்தரித்திடி லடுத்ததும்பசுமையாகும், ஆன
பெரியோர்களொடு சகவாசமதுசெயி லவர்கள்குணம் வருமென்பர்கா
ண், மந்தரநெடுங்கிரியின் முனகடலகடைந்தவரி மருகமெய்ஞ்ஞானமூ
ருகா, மயிலேறி விளையாடு குகனேபுல வயனீடு மலைமேவுகுமரேசனே

வலியோரையுமூழ்விடாமை.

அன்றுமுடிசூடிவ திருக்கவொருராமன்முனருங்காடுறைந்ததென்ன, அண்டமெரலைமயிர்தமுண்டிடபாமனுக்காலமலைபித்ததென்னெ, வென்றிவருதீதவர்சிறையிட்டநீகோளவில்வேழச்சிறையைச்சேர்ந்ததென்ன, மேதினிபடைக்குமயனுக்கொருசிறபோகிலெஞ்சிறையினுற்றதென்ன, என்றுமொருபொய்சொலாமன்னவன்விலைபோனதென்னகாணவல்லமையினாலெண்ணத்தினாலொன்றும்வாராதுபாரிலெனத்தனைப்படிமுடியுமாம். வன்றுகனிகடனமிடுகங்காகரன்பெற்றவரபுத்ரவடிவேலவா மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

பெரியோர்வாக்கிய பரிபாலனஞ் செய்தோர்.

தந்தைதாய்வாக்கியபரி பாலனஞ்செய்தவன் தசரதகுமாரராமன் தமையனருள்வாக்கியபரிபாலனஞ் செய்தோர்தருமனுக்கிளையநால்வர்சிந்தையிலுணர்ந்துகுருவாக்கியபரிபாலனஞ் செய்தவனரிச்சந்திரன், தேகியெனறோர்க்கில்லையெனவாக்கியபாலனஞ் செய்தவன்றான்கன்னன் சிந்தைதவிர்வாக்யபரிபாலனஞ்செய்தவனீள்பெலமிகுத்தவனுமான், நிறையுடன்பத்தாவின் வாக்யபரிபாலன நிலத்தினளாகினிசெய்தாள், மங்கைவழிகோயில்தல முங்குலவுதும்பி முகன்மகிழ்ந்தரவுகந்ததுணைவா மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே, ௨௫

முயற்சியின்மிக்கதூழ்வினை.

வங்காளமேருகினும் வாருகோலொருகாசு மட்டன்றியதிகமாமோ, வானேறியுயரப்பறந்தாலுமூர்க்குருவி வண்ணப்பருந்தாகுமோ, கங்காசலந்தனின்மூழ்கினும்பேச்சுரைக் காய்நல்லசுரையாகுமோ, கடலுக்குழக்கையேமுழுக்கியேமொண்டிற் காணுமோநாழிதான், ஐங்காதமோடினுந் தன்வினைகடனெருடே யடையாமனீங்கிவிடுமோ, ஆரிடஞ்சென்றாலுமெவருக்குமொலைகளசுற்றினுமமைத்தபடியன்றிவருமோ, மங்காதசெந்தமிழ்க் கொண்டுநசகீரர்க்கு வந்துயர்தீர்த்தமுருகா மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகுமரேசனே. ௨௬

இடும்பாலழிவு.

சூரபத்மன்பெலமு மிராவணன்றீரமுந் துடுக்கானகஞ்சன்வலியும், முடியானவிரணியன்வரப்ரசாதங்களுந் தொலையாதவாலிதிடமும், பாரமிகுதுரியோதனதிறனாற்றுவரமுபராக்கிர மதுகைடவர், பாரிப்புமாபெலிதனமையுஞ்சோமுகன பாக்கிலுறுவல்லமைகளும் ஏணவுசேகன்கனைதையுந்திரிபுர ரெண்ணமுங்கக்கனெழிலும், இவர்கள்துசம்பத்து நின்றமேலாரவரவரிடும்பாலழிந்தவன்றோ மாரனைக்கண்ணாலெரித்தருள்சிவன்றந்த வரபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே, ௨௭

நட்புநிலை.

மாமதியின்முயலானததுதேய்வுழிகதேய்ந்து வளருமப்போதுவளரும், வாவிதனிலாம்பல்கொட்டி சலந்தனினீர்வற்றின்வற்றிடுபெருகிலுயரும், பூமருவுபுதல்பூடு கோடையிற்றீய்ந்திடும் பொங்குகாலந்தழைக்கும், புண்டரிக மிரவிபோ மளவிற் குவிந்திடும் போதுதயமாகின்மலரும், தேருடலினைக்கிலுயிர் கூடவுமிளைக்குமது தேறிலுயிருஞ்சிறக்கும்,சேர்ந்தமேதோர்க்கிடுக்கணது வந்தாலுநல்லோர்சிநேகமப்படியாகுமே, வாமணகருபமத யானைமுகனுக் கிளைய வாலகுருபர வேலவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு குமரேசனே. ()

கைப்பலனுமவை.

பருவத்திலேபெற்றசேயும்புரட்டாசிபாதிசம்பாநடுகையும். பலமிணியவாடிதனி லணைவால்போலவே பயிர்கொண்டு வருசருப்பும், கருணையொடுமிக்கநாணயமுள்ளோர்கையினிற் கடனிட்டு வைத்த முதலும் காலமதுநேரிற் றனக்குறுதியாகமுன் கற்றுணர்ந்திடு கல்வியும், விருகாசரைக்கண்டு, பழயசிநேகமுமவிவேகிகட்குபகாரமாம், வீணலவினைவையெல்லாங்கைப்புலனதாக வபிவிர்த்தியாய்வருமென்பர்காண் மருவுலாவிய நீபமாலையுந்தண்டாள மாலையும்புனைமார்பனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே, ௪௯

சமயத்துக்குதவாதவை,

கல்லாதுபுஸ்தகத்தனிலெழுதிவீட்டினிற்கட்டிவைத்திடுவித்தையும், காலங்களுக்குதவவேண்டுமென்றன்னியன்கையிற்கொடுத்தபொருளும், இல்லாளைநீங்கியே பிறர்பாலிசாதயென் றிருக்கின்றகுடிவாழ்க்கையும், ஏறுமாறுகவே தேசாந்தரம்போயிருக்கின்ற பிள்ளைவாழ்வும் சொல்லானதொன்றுமவர்மனமானதொன்று மாச்சொல்லும்வஞ்சகர்நேசமும், சுகியமாயுண்டென் றிருப்பதெல்லாந்தருண துரிதத்திலுதவாதுகாண், வல்லானகொங்கையிட மாதுதெய்வானைகுற வள்ளிபங்காளநேயா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௫௰

திரும்பமாட்டாதவை

ஆடரவின்வாயினி லகப்பட்டதவளையும் யானைவாயிற் கரும்பும், அரிதானகப்பலிற்பாய்பரக்காற்றினிலகப்பட்டுமெலிகாக்கையும், நாடறியவேதாரைவார்த்துக் கொடுத்ததுநன்மைக்குளானவுயிரும், நலமாகவேயணைகடந்திட்டவெள்ளமுநாய்வேட்டை பட்டமுசலுமதேடியுண்டார்வைச்சுளானபல வுடைமையுந்தீவானதையானமனையும், திரள்கொடுங்கோலரசர் கைக்கேறுபொருளுந் திரும்பிவாராவென்பர்காண், மாடமிசையன்னக்கொடித்திரள்சோணசோணாடு வாழ்ந்திடுமுதல்வனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, ௫௧

இதினுமிது நன்றென்பவை,

கடுகடுத்தாயிரஞ் செய்குவதின்சொலாற் களிகொண்டழைத்தனன்று, கனவெள்ளியாயிரஞ் செய்வதிற்பொய்யுரை கருதாது சொலாமைநன்று, வெடுவெடுக்கின்றகோ ரவியிலேகியுறவினிழலில்மேவியொடு பகைமைநன்று, வெகுமதிகளாயிரஞ் செய்வதினொருவர்க்குவேலைகள் டுதவைநன்று, சடுதியிற்பகருவஞ் சொல்லுங்கொடைக்கிங்கு சற்றுமிலையென்னனன்று, சமபத்துடற்பிணியின் பொலிவுகுலதிண்மைபற்ற கரித்திரியனன்றுகாண, மடுவினிற்கரிபோலே மெனவெவக்கருள்செய்தோன் மருகனுனமுதல்வா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே,

பலகூடினும் ஒன்றற்கீடாகாதவை,

தாரகைகளொருகோடி வானத்திருக்கினுஞ்சந்திரர்க்கீடாகுமோ தாருவிரகொடிதொனிகள் பலகூடினுமொரு தமபட்ட வோசையாமோ கோரமிதுபன்றியின் குட்டிபலகூடினொருகுஞ்சரக்கன்றாகுமோ கொட்டிமலர்வாயிற் பலகூடினுமொரு சோகனகமலராகுமோ, பாரமிதுப்பிள்ளைக ளனேகம்பிறந்துமவிற் பண்ணொருவனுக்குநிகரோ, வாரணக்கொடியொரு காத்திற்பிடித்தோன்றில் வடிவேலணிந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே, ௫௩

அருமையறிதல்.

மணமாலை யருமையைப் புணைபவர்களே யறிவர் மட்டிக்குரங்கறியுமோ, மக்களுடையருமையைப் பெற்றவர்களேயறிவர் மலடிதானறிவதுண்டோ, கணவருட யருமையைக் கற்பானமாதறிவள் கணிகையானவளறிவளோ, கருதுமொருசத்தியின் பாண்டமெனபதை வருங்கலைவாணநாயறியுமோ, குணமானகிளியருமைதனைவளர்த்தவரறிவார் கொடியபூனையறியுமோ, குலவுபெரியோரருமை நல்லோர்களே யறிவர்கொடுமூடர்தாமறிவரோ, மணவாளனேயென்று குறவள்ளிபின்றொடரவண்முதழுவுமழகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௫௪

நீச்சரர்பாற் பயன்படாதவை.

மடுவினிற்கஞ்சமலருண்டொருவ ரணுகாமல்வன்முதலையங்கிருக்கும், மலையினிற்றேனுண்டு சென்றொருவர்கிட்டாமனே மருவியுதிலவணடிருக்கும், நெடுமைதிகழ்காவழுமலருண்டொருவரணுகாமனியகாதமுள்ளிருக்கும், நீடுபலசந்தனமருங்குமுண்டணுகாது நீளரவுசூழ்ந்திருக்கும், குடிமக்கிவாழ்கின்றவீட்டினிற்செல்லாதுகுரைநாய்களண்

இருக்கும், கொடுந்தியாகியுண் டிரையூறுபேசுங் கொடும்பாவியுண்டு கண்டாய், வடிவையுங்கடுவையும் பொருவுமிருகண்ணிகுற வள்ளிக்குகந்தகணவா, மயில்லேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரே னே. ()

கணிகையருழிபு

தேவதாசிகள்வீடு சந்தைப்பெரும்பேட்டைசேர்ந்திடுபடுக்கைவீடு, தெருவாசல்கட்டிப்பொதுவம்பலமுடுத்ததுகில்செய்தகுகாடுசாலை, மேவலாகியகொங்கைகையாடுதிரள்பந்துவிழிமனங்கவர் தூண்டிலாம், மிக்கவெம்பூநீர்மே லெழுத்ததிகமோகமொருமின்னலிரு துடைசர்ப்பமாம், ஆவலாகியவல்குலோதண்டம்வாங்குமிட மதிகபடமாமனதுகல் அமிர்தவாயிதழ்சித்ர சாலையைச்சிற்குழியவர்க்கா வைக்கலாமோ, மாவடிவுகொண்டே யொளித்தவொருசூரனை வதைத்தவடிவேலாயுத மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௫௬

கலிகாலக்கொடுமை.

தர்மபுத்திசொன்னால் மறுத்திடுங்காலமுயர் தந்தையைச்சீறுங் காலம், சற்குருவைநிந்தைசெய்காலமெய்க்கடவுளைச் சற்றுமெண்ணாத காலம், பேய்தெய்வமென் றுபசரித்திடுங்காலம் புரட்டருக்கேற்றகாலம், பெண்டாட்டி வையினுங் கேட்கின்றகாலநற் பெரியோர்சொல் கேளாதகாலம், தேய்வுடன்பெரியவன் சிறுமையுறுகாலமிகுசிறியவன் பெருகுகாலம்தெருவில்விட்டோடினோர்வரிசைபெறுகாலம்வசை செப்புவோர்க்குதவுகாலம். வாய்மதம் பேசிவிடு மனியாயகாரர்க்கு வாய்த்தகலிகாலமையா, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடுமலைமேவு குமரேசனே. ௫௭

அவரவர்க்குரியவை.

கல்வியொடுகனமுரச சபையின்மேல்வட்டமாக் காணவைப்போன்பிதாவாம், கற்றுணர்ந்தேதனது புகழாற்பிதாவைப் ப்ரகாசஞ்செய்வோன்புத்திரன், செல்வமிதுகணவனே தெய்வமென்றனுதினஞ் சிந்தைசெய்பவள்மனைவியாம், சினேகிதனைபோலவே யன்புவைத் துண்மைமொழிசெப்புமவனேசோதரன், சொன்னநெறிதவறாமல்வழிபாடு செய்துவரு துய்யனேயினிய சிஷ்யன், வல்லிகாமிஞ்சு சுரகுஞ்சரியுடன் குறவர்வஞ்சியைமணந்தகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடுமலைமேவுகுமரேசனே. ௫௮

சிறுமையிற்பெருமை

சேற்றிற்பிறந்திடுங் கமலமலர்கடவுளது திருமுடியின் மேலிருக்கும், இகழ்சிப்பியுடலிற் சனிதமுத்தரசனதுமகுடத்தின்மேலிருக்கும், போற்றிடுபூச்சியின்வாயினூல்பட்டென்று பூசைக்குநேசமாகும், புகலரியவண்டெச்சி லானதேனைத்தேவர்கொள் புனிதவபிஷேகமாகும்

சாற்றியபுலாலொடு பிறந்தகோரோசனை சவாதுபுழுகனைவர்க்குமாம்,
சாதியினத்திற் பிறக்கினுங்கற்றோர்கள் சபையின்மேல்வட்டமன்றோ,
மாற்றிச்சுரத்தினை விபூதியா லுடல்குளிர வைத்தமெய்ஞ்ஞான முத
லே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

செய்யத்தகாதவை

தானுசரித்துவரு தெய்வமிது வென்றுபோய்ச் சததியஞ்செயில்
விடாது தன்வீட்டிலேற்றிய விளக்கென்று முத்தந் தனைக்கொடுத்தா
லதுசுடும், ஆனாலும் மேலவர்காண மெத்தவுர் தனதென் றிடாதுசெ
யிற்கெடுதியாம், ஆனைதான்மெத்தப் பழக்கமானாலுஞ் செயாதுசெய்
தாற்கொன்றிடும், தீனாதினிதொன்றும் மீதூணவிரும்பினாற்றேகபி
டைகளேதரும், செகராசாசனுவென்ன வேலாதசாரியஞ் செய்தால்
மனம்பொறார்காண், வானுடுபுகழுமொருசோணாடுகழையவிவண்வந்த
வதரித்தமுதலே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு
குமரேசனே, ௯௰

நடுவுநிலைமை

வந்தவிகாரத்தி லினியபரிதானங்கள் வருமென்று நேசரென்றும்
வன்பகைஞரென்று மயலோரென்று மிக்கதனவானென்று மேழையெ
ன்றும், இந்தவகையைக்குறித்தொருபக்ஷபாதமோ ரெள்ளள வுரைத்
திடாமல், எண்ணமுடனேவிகிதபுத்தியொடுசாக்ஷிக்கு மேற்கச்சபாச
மதமாமுந்தவிருதலையுஞ் சமன்செய்தகோல்போலமொழிந்திடிற்றர்ம
மதுகாண, முனைவிமனுடல்பாதி யிருகந் தனக்கென்று முன்றருமர்
சொன்னதலவோ, மைந்தனெனவனறுமை முலைப்பால்கொடுத்திட வ
ளர்ந்தருள்குழந்தைவடிவே, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவுகுமரேசனே. ௯௧

பக்ஷபாதம்.

ஓரவிவகாரமா வந்தவர்முகம்பார்த் துரைப்போர் மலைக்குரங்கா
முயர்வெள்ளெருக்குடன் முளைத்துவிடுமவரில் முறையமூர்புகழ்த்
தமாம், தாரணியிலிவர்கள்கிளைகெலியிலேபோலுஞ்சமானமெழுபி
றப்பும், சந்ததியிலாதுழல்வரவர்முகத்தினினமூததையலேகுடியிரு
ப்பாள்பாரமிவரென்றுபுவி மங்கையுநடுங்குவள் பழித்ததூர் மரணமா
வர், பரமுடிவிலேரவுரவாதிநரகத்திலேயனுபவிப்பரெப்போதுமென்றா
ர், வாரபுடனருணகிரி நாதருக்கனுபூதி வைத்தெழுதியருள்குருபரா
மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௨

ஒன்றிலாமையாற் சிறவாதவை

கொங்கையில்லாதகட் கெந்தனைப்பணியுடைமை கூடினும்பெண்
மையில்லை, கூறநிறைகலவியில்லாயலெத்தனைகவிதைகூறினும்புலமை
யில்லை, சந்ததியில்லாதவர்க் கெத்தனைவிவேகஞ் சரிக்கினுங்கனந்தயில்

லே, சட்சுவைபதார்த்தவகை யுற்றாலுநெய்யிலாச்சாதமுந்திருப்தியில்லே, பங்கயமில்லாமலெத்தனைமலர்கள்வாவியுற்பாரித்துமேன்மையில்லே பத்தியில்லாமல்வெகுநியமமாயர்ச்சனைகள் பண்ணினும் பூசையில்லே, மங்கையரிலாமனைக் கெத்தனையருஞ்செல்வம்வரினுமில்வாழ்க்கையில்லே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலேமேவு குமரேசனே,

அளவுபடாதவை.

வாரியாழத்தையும் புனலெறியு மலேகளையு மானிடர்கள்சனனத்தையும் மன்னவர்கணிளைவையும், புருஷயோகங்களையும் வானினுயர்நீளத்தையும், பாரிலெழுமணலேயும்பலபிராணிகளேயும் படியாண்டமன்னவரையும், பருப்பதத்தின்னிறையு மீசுரச்செயலேயும் பனிமாரிபொழிதுளியையும், சீரியதமிழ்ப்புலவர் வாக்கிலெழுகவியையுஞ் சித்தர்தமதுள்ளத்தையும், தெரிவையர்கள் சிந்தையையும் மிவ்வளவெனும்படி தெரிந்தளவிடக்கூடுமோ வரிசைமடந்தகுடிகொண்டநெடுமாலுக்கு மருகனெனவந்த முருகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலேமேவுகுமரேசனே. ௬௪

பிறர்மனைகாத்தல்

தந்தாரமன்றியேபரதாரமேனினைவு தனைவைத்தகாமுகர்க்குத், தயையில்லேநிசமில்லே வெட்கமில்லேசமரினிற்றைரியஞ்சற்றுமில்லே, அந்தாரமில்லேதொடர் முறையில்லே நிலேயில்லே யறிவில்லேமரபுமில்லே, யறமில்லேநிதியில்லே யிரவனிற்றனிவழிக்கச்சமோமனதிலில்லே, நயமில்லே யிளமைதனில் வலிமையிலேமுத்திபெறு ஞானமிலேயென்பர்கண்டாய் மந்தரபரிமள சுகந்தாதிபுனேயுபணி மார்பனே யருளாளனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலேமேவுகுமரேசனே. ௬௫

மானம்விடாமை

கனபாரமேரிற் பிளந்திடுவதன்றியேகற்றூண்வளேந்திடாது, கருதலர்களாலுடைந் தாலுமுயிரளவிலேகனசூரணமசிண்முறியான், தினமோரிடுக்கண்வந்துற்றாலும்வேங்கை தால் சீவனைவிற்கொடாது, திரமானபெரியோர் சரீரங்கள்போகினுஞ்செப்புமுறைதவறிடார்கள், வணமேறுகவரிமா னுயிர் போகுமளவுந்தன் மயிரினென்றுங்கொடாது வாராதவாபத்து வருகினுங்கற்புடைய மாதுநிறைதவறிநடவாள் மனதாரவுனதடைக்கலமென்றதீரர்க்கு வன்சிறைதவிர்த்த முருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலேமேவுகுமரேசனே. ௬௬

திருவருட்சிறப்பு,

திருமகள்கடாட்சமுண்டானலெவர்க்குஞ்சிறப்புண்டுகனத்தையுண்டு, சென்றவழியெல்லாம்பெரும்பாதையாய்விடுஞ் செல்லாதவார்த்தைசொல்லும் பொருளொருதுரும்புமரி யாதையாஞ்செல்வமோபுகல்பெறுங்காறுபோலாம், புவியினமுன்கண்டுமதியாதபேர்பழகினவர்

போலவேநேசராவார், பெருமையொடுசாதிப்பியர்ச்சிக்குருடணுதினம் பேருப்பிரதிஷ்டையுண்டாம், பிரியமொடு பகையாளிகூடவுறவாகுமான்மேற்சினிற்பிழையாராது, வருமெனநினைக்குமாருள் வாகசூடிவருமயஇக வல்லமைகண்மிகவுமுண்டாம், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௬௭

நட்புநிலை.

கதிரவனுதிப்பதெங்கே கஞ்சமெங்கே களித்துள மலர்ந்ததென்ன, காமேகமெங்கேபசுந்தோகையெங்கே கருத்தினட்பானதென்ன, மதியெங்கேபெருங்குமுதமெங்கே முகமலர்ந்து மகிழ்கொண்டதென்ன, வல்லிரவு விடிவதெங்கே கோழியெங்கே மகிழ்ந்து கூவினதென்ன, நிதியர்சரெங்கே யிருந்தாலுமவர்களொடு நேசமொன்று யிருக்கும் நீதிமிகு நல்லோர்களெங்கிருந்தாலுமவர் நிறைபட்சமறவர்கள்காண், மதிலுடன்கோபுரமும் வாவியுப்புடைசூழ மருவுசோணாட்டதிபனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௬௮

காலமறிதல்.

காலைபகற்கலம் வென்றிடுங் கூகையைக் கனகமுடி யரசர்தாமுங்கருதுசயகாலமது கண்டந்தவேளையிற் காரியமுடித்துவிடுவார், மேகமுங்கார்கால மதுகண்டுபயிர்விளைய பென்மேலு மாரிபொழியும், மிக்கானவறிவுளோர் வருதருணகாலத்தின் மிடியாளருக்குதவுவார், நாகரீகமுறுகுயில் வசந்தகாலத்திலே நலமெனாமுகந்துகூவும், நல்லோர் குறித்ததைப் பதருமலர்ந்தந்த நாளையின் முடிப்பாகண்டாய், வாகனையமாலைகணமாலைபுலவெனுமலக வாடிக்காக நிசமல்லவோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௬௯

இடனறிதல்.

தரையதனிலோடுந்தேர் நீள்கலிலோடுமோ சலதிமிசையோடு கப்பல், தரைமீதிலோடுமோ தண்ணீரிலுறுமுதலை தனமுனைகரிநிற்குமோ விரைமலர்முடிப்பமர் வேணீடரவிணை வெல்ல மிகுகருடனுலாகுமோ, வேங்கைகளிருக்கின்ற காடுதனிறஞ்சாமல் வேறொருவர் செல்லவசமோ துரைகளைப்பெரியோரை யணடிவாழ்வோர்தமைத் துஷ்டர் பகையெனனசெய்யும், துணைகண்டுசேரிடமறிந்துசேரென்றௌவை சொன்னகதைபொய்யல்லவே, வரையூதுமாயனை யடுத்தலாம்பஞ்சவர்கள் வன்போர்செயித்ததன்றோ, மயில்லேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௭௰

யாக்கைநிலையாமை

மனுநன்மாந்தாதாமுதலானவர்களெல்லாரு மண்மேலிருந்து வாழ்ந்து. படியாதிருந்தபேரிலலையவர்தேடியதைவாரிவைத்தாருமில்லை, பனியதனைநம்பியபேர்பூட்டுகதையெனப்பூமாவுடலைநம்பி, பார்

இன்னும்வெகு நாளிருப்போமென்று பலகோடி நினைவையெண்ணி, அநீதமாய் விருதாவின் மாய்வதேயல்லாமலன்பாகநின்பதத்தை யர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென்றெண்ணார்களாசைவலையிற் சுழலுவார், வனிதையர்கள் காமவிகாரமே பகையாகுமற்றொருபகையு முண்டோ, மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே,

வேட்டகத் திகழ்ச்சி,

வேட்டகந்தன்னிலே மருகன் வந்திடுமளவின் மென்மேலுமுபசரித்து, விருந்துகள் சமைத்துநெய் பாற்றயிர் பதார்த்தவகை வேண்டுவவெலாமமைப்பார், ஊட்டமிகுவர்க்கவகை செய்திடவர் சைலமிட்டுறுகியாய்முழுகிவிப்பார், ஓயாதுதின்னவேபாக்கிலை கொடுத்திடுவோருற்றநாளுலாகிலோ, நாட்டமொருபடியிறங்குவது போனமரியாதை நாளுக்கு நாள் குறைவுறும், நகைசெய்வர் மைத்துனர்களுவல்பார் போவென்று நாணுமன் மாமிசொல்வாள், வாட்டமனையாளொருதுரும்பாய் மதிப்பளவில் மட்டியிலும் மட்டியன்றோ, மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே, ௭௨

செல்வநிலையாமை.

ஓடமிடுமிடமது மணற்சுடுஞ்சுடுமிடமு மோடமிகவே நடக்கும் உற்றகோ ராற்றின்மடு மேடாகமேடெலா முறுபுனல்கொண்டு மடுவா, யிடும்நாடுகாடாகு முயர்காடுநாடாகிவிடு நவில்சகடுமேல் கீழதாய், நடையூறுசங்கைபல கூடுமுடனேகலையு நன்னிலவு மிருளாய்விடும், நீடுபகல்போயின் பிறகுவாகுமிரவுபோய் நிறைபகற்போதாய்விடும், நிதியோரமிடித்திடுவர் மிடியோர்செழித்திடுவர் நிசமல்லவாழ்வுகண்டாய்மாடு ணிபாரிதன் மக்கணிதிபூஷணமுமாருவுதனமாகுமன்றோ மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே. ௭௩

பிறந்தாற்பெறுபேறு.

சடமென்றெடுத்தாற் புவிக்குநல்லவனென்று தன்பேர் விளங்கவேண்டும், சதிருடனிதல்லாதுமெய்ஞ்ஞானியென்றவதரிக்கவேவேண்டுமல்லால், இடமினில்ரணசூர வீரனிவனெனவே திசைமெச்சவேண்டுமல்லால், தேகியென்பவருக் கில்லையென்றுமைலே செய்யவே வேண்டுமல்லால், அடையுடன்பலகல்வி யாராய்ந்துவித்துவானாகவேவேண்டுமல்லால், அறிவானதுரைமகக ளாகவர வேண்டுமிவ ரதிசபூபாலரையா, வடகுவடுகிடுகிடென் வெழுகடலுமலையெறிய மணியுரகன்முடிகணெரிய, மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே. ௭௪

வேசைநிந்தை.

தேடித்தப்விட்டிற் டணக்காரர்வந்திடிற் றேகசீவன் போலவே, சினேகித்தவும்மையொருபொழுதுகாணாவிடிற்செல்லுறுதன்னமென்

றே. கூடிச்சுகிப்பரென் றுசையுன்மேலெறு கூசாம லாணையிடுவோர், கொங்கையை வெடிக்கப்பிடிக்கக் கொடுத்திகழ்கொடுப்பர்சும்பனமுகப்பு, வேடிக்கைபேசியே கைமுதலபறித்தபின வேறுபடநிந்தைசெய்து, விடவிடப்பேசுவார் தாய்கலகமூட்டியே விட்டுததூரத்தி விடுவார் வாடிக்கை யாயிந்த வண்டப்பரத்தையர் மபகத்தை நம்பலாமோ மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே, ௭௫

இதற்கிது உறுதியெனல்,

கைக்குறுதிவேல்வில மனைக்குறுதி மனையாள் கவிக்குறுதி பொருளடக்கம், கன்னியர்தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி கண்டிடிற் சத்யவசனம், மெய்க்குறிதி முன்பின் சபைக்குறுதி வித்வசனமவேசையர்க்குறுதிதேடல், விரகருக்குறுதிபெண் மூப்பினுக்குறுதி யூண் வீரருக்குறுதிதீரம், செய்க்குறுதிநீராகும் பார்க்குறுபூசெங்கோலசெழும்படைக்குறுதிவேழம், செல்வர்தனக்குறுதி பிள்ளைகளகர்க்குறுதி சேர்ந்திடுஞ்சற்சனர்களாம், மைக்குறுதியாகிய விழிக்குறமடந்தைசுரமங்கை மருவுந்தலைவனே மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௭௬

வறுமையிற்சிறுமை,

வறுமைதான் வந்திடிற் றுய்பழுதுசொல்லுவாள் மனையாட்டிசற்று மெண்ணுள், வாக்கிற்பிறக்கின்ற சொல்லெலாம பொல்லாத வசனமாய்வந்து விளையும், சிறுமையொடு துலையாவிசாரமே யல்லாது சிந்தையிற்றைரியமில்லை செப்பசபைதன்னிலே சென்றுவர வெட்கமாஞ் செல்வரைக்காணுணும், உறுதிபெருவீரமுங் குன்றிடும்விருந்துவரிலுயிருடன் செத்தபிணமாம் உலகம்பழித்திடும் பெருமையோர்முன்புசென்றொருவ ரொடுசெய்திசொன்னால், மறுவசனமுஞ் சொலார்துன்பினிற்றுன்பமிகு வந்தணுகிடா தருளுவாய், மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேகுமரேசனே. ௭௭

தீச்சார்பானன்மையிழிப்ப,

ஆனை தண்ணீரினிழல் பார்த்திடத்தவளைசென் றங்கேகலக்கியுலவும் ஆயிரமபேர்கூடி வீடுகட்டிடிலேக மறைகுறளுமுடனேவரும், வனைநற்பெரியோர்கள் போசனஞ்செய்யுமளவிலீக்கிடந்திசை கேடதாம். இன்பமிகுபசுவிலே கன்று சென்றூட்டுதற் கினியகோனது கடக்கும், சேனைமன்னவரென்ன சுருமரியமிகருணுஞ் சிறியோர்க ளாற்குறைபடும, சிங்கத்தையும்பெரிய ரிஷபத்தையும் பகைமைசெய்ததொருநரியல்லவோ, மானையுந்திகழ்தெய் வானையுந்தழுவுமணி மார்பனேயருளாளனே. மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

இடையூருற்றும் பயனபடாதவை.

ஆறுதண்ணீர்வற்றி விட்டாலுமுன் றூரோமுதபாணங்கொடுக்கும் ஆதவனை பொருபாதிகட்செவிமறைத்தாலுமப்போது முதவிசெயவன்

கூறுமதிதேய்பிறைய தாகவேகுறையினுங் குவலயத்திருள் சிதைக்கும் கொல்லைதான்சாலிபோய் விட்டாலுமங்குவரு குருவிக்குமேச்சலுண்டு வீறுடனுதாரிதான்மிடியானபோதினிலுமிகவுடிவருபவர்க்குவேறுவகையில்லையென் றுமையாதியென்றளமகிழ்ந்துதவுவான, மாறுபடுசூரசங்காரகம்பீரனேவடிவேலணிந்தமுருகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

இன்னவர்க்கிதுவில்லையெனல்

சார்பிலாதவருக்குநிலையேதுமுதலிலாதவருக்கிலாபமேது. தயையிலாதவர்க்குறவேதுபணமிலாதார்க்கேதுவேசையுறவு, ஊரிலாதவர்தமக் கரசேதுபசிவேளையுண்டிடாற்குறுதிநிலையே, துண்மையில்லாதவர்க் கரமேதுமுயல்விலார்க்குறுவதொருசெல்வமேது, சோர்விலாதவருக்குமற்றுமொருபயமேது சுகமிலார்க்காசையேது துர்க்குணமிலாதவர்க்கெதிராளியேதிடர் செய்துஷ்டர்க்கிரக்கமேது மாரபுருவவாலிமேலஸ்திரம்விடுத்தநெடு மான்மருகனானமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, அ௯

இதினுமிதுநன்றெனல்,

பஞ்சரித்தருமையறியாபொருளையெய்தலிற்மலர்மனைப் பிச்சைநன்று, பரிவாகவுபசாரமிலலாவிருந்தனிற்பட்டினியிருக்கைநன்று, கஞ்சவொருமுயலைப்படு வென்றிதனில்யானையொடு சமர்செய்துதோற்றநன்று சரசகுணமில்லாதபெண்களைச்சேர்தலிற் சன்னியாசித்தனன்று அஞ்சலர்தங்களொடு கட்பாயிருப்பதனி லரவினொடுபழகுவதுநன் றந்தணர்க்காபத்தி லுதவாதிருப்பதனி லாருயிர்விடுத்தனன்று வஞ்சகருடன்கூடி வாழ்தனிற்றனியேவழிந்திடுஞ்சிறுமைநன்று, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே அக

நிலையாதவை

கொற்றவர்கள்ராணுவமு மாருநேராகியகுளங்களுந்தாசியுறவும் குணமிலார்நேசமும் பாம்பொடுபழககமுங் குலவுநீர் விளையாடலும், பற்றலார்தமதிடை வருந்துவிசுவாசமும் பழயதாயாதிகிணரும், பரதாரமாதரதுபோகமும்பெருகிவருபாங்கானகாற்றுவரவம், நற்றுமொருதுர்ப்புத்தி கேட்கின்றபேருறவு நல்லமதயானைநட்பும், நாவினல்லுறவுமொரு நாள்போலிராதவைக ணம்பப்படாதுகண்டாய், மற்றுமொருதுணையில்லை நீயெனப்பரவும் வானவர்கள்சிறைமீட்டவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. அ௨

நற்புலவர் தீபபுலவர்செயல்.

மின்காளசோலையிற் குயில்சென்றுமாங்கனி விருப்பமொடு தேடிநாடும், மிடைசருங்காசங்க ளெக்கனியிருந்தாலும் வேப்பங்கனிக்குநா

டும், எக்காலும்வரிவண்டு பங்கேருகத்தினி லிருக்கின்றதேனைநாடும், எத்தனைசுகந்தவகை யுற்றாலுமுருள்வண்டி னந்தமலத்தைநாடும், தக்கோர்பொருட்சுவைநயங்களெங்கேயென்றுதாம்பார்த்துகந்துகொள்வார், தாழ்வானவன்கண்ணர் குற்றமெங்கேயென்று தமிழிலாராய்வா கண்டாய், மைக்காவிவிழிமாது தெய்வானையுங்குறவர்வள்ளியுந்தழுவு தலைவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

தாழ்தற்பெருமை,

வேங்கைகள்பதுங்குதலு மாமுகிலொதுங்குதலும் விசிறிலைகுனிந்திடுதலும், மேடமதகன்றிடலும் யானைகளொதுங்குதலும் வெள்ளவிடைகள் துள்ளிவிழலும், மூங்கில்கள்வணங்குதலுமேலவரிணங்குதலு முனிவர்கணயர்ந்து கொளலும், முதிர்படையொதுங்குதலும் வினைஞர்களடங்குதலு முதலினர்பசந்திருத்தலும், ஆகாரவுசெயகுதலு மகிழமலருலர்ந்திடலு மாயர்குழல்சூடுபடலும், அயபுவியிலிவைகாரி யங்களுக்கல்லாம லதனுலிளைப்புவருமோ, மாங்கனிக்காயரனைவலமதுபுரிந்தவளா மதகரிக்கிளையமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

தெய்வச்செயல்,

சோடாய்மரத்திற் புராவிரண்டிருந்திடத் துரவுகண்டேவேடுவன், தொலாமலவையெய்ய வேண்டுமென்றொருகணை தொடுத்துவில்வாங்கிநிற்க, ஊடாடிமேலேயெழும்பிடிலடிப்பதற்குவலைராஜாளிசுழல, உயரப்பறந்துங்கொண்டேதிரியவப்போது தலைதத்தக்கலைவேடனடியில், சேடாகவல்விஷந் தீண்டவேயவன்விழச் சிலைபிற்றெருந்தியவாளி, சென்றிராஜாளிமேல் தைத்துவிழவவ்விரு சிறைப்புறாவாழ்ந்ததன்றோ, வாடாமலிவையெலாஞ் சிவன்செயல்களல்லாதுன் மனசசெயலினாலுமவருமோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

பாடலியல்பு.

எழுத்தசைகள்சீர்களைக ளடிதொடைகள்சிதையா திருக்கவேவேண்டுமப்பா, ஈரைமப்பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்பினியசொற்களமையவேண்டும், அழுத்தமிகு குறளினுக் கொப்பாகவேபொருளடக்கமுமிருக்கவேண்டும், அன்பாமப்பாவின்மிசைநதவரல்வேண்டுமுனலங்காரமுற்றதுறையில், பழுத்துளமுவந்தோசையுந்தவரலவேண்டும் படிக்குமிசைகூடலவேண்டும், பாவகைகவினனவை பொருந்திடச்சொற்கவிதை பாடிடிற்சிறப்பென்பர்காண், பழுந்தினஞ்செங்கைதனில் வைத்த கங்காளனருணையைந்த னென்னவந்த முருகா மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

அ

விபூதிவாய்குமுறைமை.

பரிதினிலிருந்துமியல் சிவிகையிலிருந்து முயர்பலகையி லிருந்து மிகவே, பாங்கானவம்பலந் தனிலேயிருந்தும் பருத்ததிண்ணையிலிருந் தும்தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்கமேனின்று திருநீறுவாங்கியிடி னும், செங்கையொன்றாலும் விரன்மூன்றாலேவாங்கினுந் திகழ்தம்பல த்திலேநின்றிடும், அரியதொருபாதையி னடக்கின்றபோது மசுத்தநிலமா னவிடத்திலும், அங்கேதரிக்கினுந் தந்திடிற்றள்ளினு மலர்க்குநரகென்பர் கண்டாய், வரிவிழிமடந்தைகுற வள்ளிநாயகிதனைமணந்து மகிழ்சதுரா தனே மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

இவ்வுறுப்பாற் பயனில்லெனல்

தேவாலயஞ்சுற் றிடாதகாலென்னகால் தெரியாக் கண்ணென்ன கண், தினமுமேநின்கமல பாதத்தைநினையாத சிந்தைதா னென்ன சிந்தை, மேவாகமஞ்சில புராணமவைகேளாமல் விட்டசெவி யென்ன செவிகண், விமலனைவணங்காத சென்னிபன் சென்னியணி விடைசெ யாக்கையென்னகை, நாவாரநினையேத் திடாதவாயென்னவாய் நற்றீர் த்தமூழ்காவுட, னிலந்தென்னவுடல் பாவியாகியசனன மண்ணினு ற்பலனேதுகாண், மாவாகிவேலைதனில் வருசூரன்மார்புருவ வடிவே லைவிட்டமுருகா மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு கு மரேசனே. ௮௩

நற்பொருளொடு தீப்பொருள்பிறத்தல்.

கோகனமங்கையுடன் மூத்தவன்பிறந்தென்ன குலவுமாட்டின் ச ணநர்தான், கூடப்பிறந்தென்ன தண்ணீரினுடனே கொடும்பாசியற் றுமென்ன, மாகநுணுமுதிநூறு நஞ்சம் பிறந்தென்னவல்லிரும்பிற் றுருத்தான், வந்தேபிறந்தென்ன செம்மரந்தனிலொக்குள் வளமொ டு பிறந்தென்னவுண், பாகமிருசெனனலொடுபதர்தான் பிறந்தென்ன பன்னுமொருதாய்வயிற்றிற், பண்புறுவிவேகியொடு கயவர்கள் பிறந் ததென்னபலனேதுமில்லையன்றோ, மாகனகமேருவைச் சிலையெனவளை த்தசிவன்மைந்த னெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௰

தன்னினத்தாலறிவு,

குலமானசம்மட்டி குறடுகைக்குதவியாய்க் கூரியும்புகளைவெல்லு ம், கோடாலி தன்னுளே மரமதுநுழைந்ததனை கோத்திரமெலா மழி க்கும், நலமானபார்வைசேர் குருவியானதுவந்து நண்ணுபறவைகளை

யார்க்குங்கட்புடன்வளர்ந்தகலை மானென்றுசென்றுதன் கலவிச்சாதிதனையிழக்கும், வுலவுநற்குடிதனிற் கோளார்களிருந்து கொண்டுற்றுரை, யிடறிப்பார் உளவினில்லாமறா ஏறிபாதெனச்சொல்லு முலகமொழி, நிசமல்லவோ வலமாகவந்தர னிடத்திற்கனிகொண்ட மதயானைதன்சகோதரா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

வீணுக்குழந்தல்.

குயின்முட்டைதனைதென்று காக்கையடைகாக்குங்குணம்போலுமீக்களெல்லாங், கூடியதேமுண்ணவேண்டுமென்றேதினை கூடுய்க்கநறவுபோலும், பயிர்சோறருக்குப்பிறந்திடத் தாம்பெற்றபாலனொன்றுங்கதியே, பாராட்டி முத்தமிட்டன்பாய் வளர்த்திடும் பண்பிலாப்புருஷர்போலும், துயிலின்றிநிதிகளைத தேடியேயொருவர்பாற் றெட்டுத்தெரிந்திடாமல், தொகைபண்ணிவைத்திடுவர் கைக்கொண்டு போகவருசொந்தமானவர்வேறுகாண், வயிரமொடு சூரனைச் சங்காரமேசெய்துவானவர்க்குதவுதலைவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௯௮

இதுசேரினிதுபயன்படாதெனல்.

அழலுக்குள்ளேவிட்ட நெய்யும்பெருக்கானவாற்றிற்கரைத்தபுளியும், அரிதானகமரிடகவிழ்த்திட்டபாலும் வரு மலைகட் கிடுபூசையும், கழல்பெருங்காற்றினில் வெடித்தபஞ்சும்மணற் சொரிகுறும்பனிநீருள், சொல்லரியகாட்டுக்கெரித்த நிலவுங்கடல் சுழிக்குளே விடுகப்பலும், விழலுக்கிறைத்திட்டதண்ணீருமுகமாய்வேசைக்களித்தபொருளும், வீணருக்கேசெய்தநன்றியுபலனில்லை விருதாவிதென்பர்கண்டாய், மழலைப்பசுங்கிள்ளை முன்கைமலைமங்கைதரு வண்ணக்குழந்தை முருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

கைவிடத்தகாதவர்.

அன்னைசுற்றங்களையு மற்றைநாண்முதலாலடுத்துவருபழையோரையும், அடுபகைவிரற்றப்பி வந்தவொருவேந்தனையு மன்பாமபெரியோரையும், தன்னைநம்பினரையு மேழையானவரையுஞ் சார்ந்தமறையோர்தம்மையும், தருணமிதுவென்றுநல்லாபத்துவேளையிற்சரணம் புகுந்தோரையும், நன்னயபதாகமுன் னுதவிசெய்தோரையுநாளுந்தனக்குறுதியாம், நத்துசேவகனையுங்காப்பதல்லாது கைநழுவவிட லாகாதுகாண், மன்னயிலுமினியசெஞ்சேவலுஞ் செங்கைமலர்வைத்த சரவணபவனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

தகாதசெயல்,

அண்டிவரு முற்றூர்பசித்தங்கிருக்கவே யன்னியர்க் குதவுவோ
ரும், ஆசுதபுபெரியோர்செய் நேசத்தைவிட்டுப்பின் னற்பரையடுத்த
பேரும், கொண்டவொருமனையாளிருக்கப்பரத்தையைக்கொண்டாடி
மருவுவோரும், கூறுசற்பாத்திர மிருக்கமிகுதானமது குணமிலார்க்கீ
ய்ந்தபேரும், கண்டவெருபுதியோரை நம்பியேபழையரைக் கைவிட்டி
ருந்தபேரும், கரிவாலைவிட்டுநரிவால்பற்றிநதிநீர் கடக்கின்றமரியாதை
காண், வண்டடர்கடப்பமலர் மாலிகாபரணமணி மார்பனே யருளாள
னே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே,

நல்லோர்முறை,

கூடியேசோதரர்கள்வாழ்தலாலுந்தகு குழந்தைபலபெருதலாலு
ம், குணமாகவேபிச்சையிட்டுண்கையாலுங் கொடும்பிதிர்க்கிடுதலாலு
ம், தேடியேதெய்வங்களுக் கிதலாலுந் தியாகங்கொடுத்தலாலும், சிறி
யோர்கள்செய்திடும் பிழையைப்பொறுத்துச் சினத்தைத்தவிர்த லா
லும், நாடியேதாழ்வாய்வணங்கிடுதலாலுமிக நல்வார்த்தைசொல்லலா
லும், நன்மையேதருமலாற் றாழ்ச்சிகள்வராவிவை நல்லோர்கள்செயு
முறைமைகாண், வாடிமனநொந்துதமிழ்சொன்னநக்கீரன்முன் வந்து
தவிசெய்தமுருகா, மலைமேலறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு
குமரேசனே, கூஉ

அடைக்கலங் காத்தல்,

அஞ்சலெனு நாயினுடல் தருமன்சுமந்துமுன னூர்மைக்கடந்து
வித்தான், அடைக்கலமெனுங்கயற் காகநெடுமாலுட னருச்சுனன் ச
மர்புரிந்தான், தஞ்சமெனவந்திடு புறவுக்குமுன்சிபிசரீரந்தனைக்கொ
டுத்தான், தடமலைச்சிறகரிந்தவனை முன்காக்கத் தநிசிமுதுகென்பளித்
தான், இன்சொலுடனேபூந தயவுடையராயினோ ரெவர்க்குமே வாப
த்திலே, இனியதஞ்சிவனை விடுத்தாலுங்காத்திரங்கிரக்ஷிப்பரன்றோ,
வஞ்சகிரவுஞ்சமொடுதாருகன்சிங்கமுகன் வளர்சூரனுடல்கீண்டவா,
மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, கூஎ

யோக்கியாயோக்கியம்.

பாலினொடுதேன்வந்து சேரில்ருசியதிகமாம் பருகிநீர்சேரிலென்
னும், பவளத்தினுடையமுத்தை மைத்திடிற்சோபிதம் படிகமணிநோ
க்கிலென்னும், மேலினயமன்னர்பால்யானைசேர்வதுகனதைமேஷமது
சேரிலெனகும், மிக்கானதங்கத்தினவமணி யுமிற்பெருமை வண்கல்
லழுத்திலென்னூர், வாலியமினூர்களுட னிளையோர்கள் சேரினலம்வ

ளாகிறவர்தசரிலென்னும், மருவுநல்லோரும் பெரியோர் வயிற்பிரியம் வருகபவர்சேரிலென்னும், மாலிகைதரித்தமணி மார்பனெய்வானை வள்ளிக்கு வாய்த்தகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே, ௯௮

பெரியோரியல்பு,

அன்னதானஞ்செய்தல் பெரியோர்சொல்வழி நிற்றலாபத்தில்வந்தபேருக் கபயங்கொடுத்திடுக லல்லினஞ்சேர்ந்திடுதலாசிரியன்வழி நின்றவன், சொன்னமொழிதவறாது செய்திடுதல்தாய்தந்தைதுணையடியருச்சனைசெயல், சோம்பலில்லாம லுயிர்போயினும் வாய்மைமொழிதொல்புவியி னட்டியிடுதல், மன்னரைச் சேர்ந்தொழுதல் கற்புடையமனைவியொடுவைகினுந் தாமரையிலே, மருவுநீரெனவுறுதலிவையெலாமேலாமேலவர்தமாண்பென் றுரைப்பரன்றோ, வண்மையின்மேலிவர்ந்திவ்வுலகைபொருநொடியில் வலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, ௯௯

நூலின்பயன்,

வன்னமயிலேறிவருவேலாயுதக்கடவுள் மலைமேலுகந்த முருகா. வள்ளிக்கொடிக்கினிய வேங்கைமரமாகினோன் வானவர்கள்சேனாபதி, கன்னமொழியுமைபா டிருப்புதல்வனரன்மகன் கங்கைபெற் றருள்புத்திரன், கணபதிக்கிளையவொரு மெஞ்ஞானதேசிகக் கடவுளாவினன் குடியினான், பன்னரியபுல்வயலில்வாலகுமரேசர்மேற்பரிந்து குருபாததாசன், பாங்கான தமிழாசிரிய விருத் தத்தினை பாடலொரு நூறுகோடி, நன்னயமதாகப படித்தபேர் கேட்டபேர் நாடோறுங் கற்றபேகள், ஞானபோகம்பெறுவர் பதவியாவும்பெறுவர் நன்முத்தியும் பெறுவரே, ௱

குமரேசசதகம்.

முற்றிற்று.